(4) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், திருநந்தீச்சரம், இராஜராஜேச்சரம்

33. சைவநெறி வழிபாட்டில் மிருகங்களைப் பலியிடுதல்
(1) அனுமதிக்கப்பட்டுள்ளது. (2) அனுமதிக்கப்படவில்லை.
(3) ஊக்குவிக்கப்படுகிறது. (4) ஆகமங்களுக்குட்பட்டது.

34. மகாவிஷ்ணுவின் அவதாரமகிமையை முக்கியப்படுத்திக் கூறும் இதிகாசங்கள்
(1) திருவிளையாடல் புராணம், திருவாதவூரடிகள் புராணம்
(2) பாகவதம், பெரிய புராணம்
(3) இராமாயணம், மகாபாரதம்
(4) பகவத்கீதை, திருப்பாவை

35. இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் தோற்றம் பெற்ற சைவநிறுவனங்கள் அடங்கும் தொகுதி
(1) தருமபுர ஆதீனம், இராமக்கிருஷ்ணமிஷன், ஆரியசமாஜம்
(2) நல்லை ஆதீனம், அமெரிக்கன் மிஷன், சைவப்பிரகாச சமாஜம்
(3) சிவதொண்டன் நிலையம், வேல்விழா, திருவாவுடுதுறை ஆதீனம்
(4) நல்லை ஆதீனம், அகில இலங்கை இந்துமாமன்றம், சைவவித்தியா விருத்திச்சங்கம்

36. திருநெல்வேலி ஞானப்பிரகாசர் சுவாமிகள்
(1) பசுவதையை எதிர்த்தவர் (2) சைவப்பாடசாலைகளை நிறுவியவர்
(3) சித்தர் பரம்பரையைச் சார்ந்தவர் (4) ஞானநெறியில் நின்றவர்

37. தென்னிலங்கையில் உள்ள தேநுவரையில் அமைந்திருந்த 'நகரீசன்' என்ற சிவாலயம், பண்டைய இலங்கையின் ஈச்சரங்களுள் ஒன்றான

(1) திருநந்தீச்சரம் எனக் கருதப்படுகிறது.
(2) இராமேச்சரம் எனக் கருதப்படுகிறது.
(3) சந்திரசேகரீச்சரம் எனக் கருதப்படுகிறது.
(4) இராஜராஜேச்சரம் எனக் கருதப்படுகிறது.

38. தீட்சை என்பதன் பொருள்

(1) 'சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியளிப்பது' என்பதாகும்.
(2) 'அஞ்ஞானத்தைப் போக்கி, மெய்ஞ்ஞானத்தைத் தருவது' என்பதாகும்.
(3) 'மெய்ஞ்ஞானத்தை நீக்கி, விஞ்ஞானத்தைத் தருவது' என்பதாகும்.
(4) 'புலாலுண்ணாமை' என்பதாகும்.

39. இலங்கையில் ஞாயிற்றுக்கிழமை தோறும் இந்து அறநெறிப் பாடசாலைகளை நடாத்த உதவி வருகின்ற நிறுவனம்

(1) சைவ வித்தியா விருத்திச் சங்கம்
(2) அகில இலங்கை இந்து மாமன்றம்
(3) இந்து இளைஞர் ஒன்றியம்
(4) இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

40. சைவக் கொடி எனக் குறிப்பிடப்படுவது

(1) சேவல் கொடி
(2) வில் பொறிக்கப்பட்ட கொடி
(3) நாகக் கொடி
(4) நந்திக் கொடி

### 2.1.3. எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்

**வினாப்பத்திரம் I - புள்ளி வழங்கும் திட்டம்**

| வினா இல. | விடை | வினா இல. | விடை |
|---|---|---|---|
| 01 | ...4... | 21 | ...4... |
| 02 | ...3... | 22 | ...2... |
| 03 | ...2... | 23 | ...2... |
| 04 | ...1... | 24 | ...4... |
| 05 | ...1... | 25 | ...3... |
| 06 | ...1... | 26 | ...2... |
| 07 | ...4... | 27 | ...3... |
| 08 | ...3... | 28 | ...1... |
| 09 | ...2... | 29 | ...4... |
| 10 | ...1... | 30 | ...4... |
| 11 | ...4... | 31 | ...1... |
| 12 | ...3... | 32 | ...3... |
| 13 | ...1... | 33 | ...2... |
| 14 | ...3... | 34 | ...3... |
| 15 | ...3... | 35 | ...4... |
| 16 | ...2... | 36 | ...1... |
| 17 | ...4... | 37 | ...3... |
| 18 | ...4... | 38 | ...2... |
| 19 | ...3... | 39 | ...4... |
| 20 | ...2... | 40 | ...4... |

**ஒரு விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40 புள்ளிகள்**

### 2.1.4 **வினாப்பத்திரம் 1 இற்கு விடையளிக்கப்பட்ட விதம் பற்றிய அவதானிப்புகளும் முடிவுகளும்**

✶ **வரையு 1 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

- வினா இல 2,3,4,6,12,22 ஆகிய வினாக்களுக்கு 90% இற்கு மேற்பட்டோர் சரியான விடையை அளித்திருந்தனர். இவ்வினாக்கள் அன்றாட வாழ்வுடன் தொடர்பான வினாக்களாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- வினா இல 36,39 ஆகிய வினாக்களுக்கு 20% இலும் குறைவானவர்களே சரியான விடையை அளித்திருந்தனர். விடையளிக்கக் கூடிய வினாவாக இருந்தபோதும் சமயம் சார்ந்த பொது அறிவு மாணவர்களிடம் காணப்படாமையை இது எடுத்துக் காட்டுகிறது.

- வினா இல 2-13 வரையுள்ள வினாக்களுக்கு 50% இற்கு மேற்பட்டோர் சரியான விடையை அளித்திருந்தனர். அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பானவையாக இவை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

- வினா 1 இற்கு 50% மான பரீட்சார்த்திகளே விடையளித்திருந்தனர். இலகுவான வினாவாக இருந்தபோதும் மாணவர்களிடம் இந்து சமயம் பற்றிய அடிப்படை அறிவின்மையை இது குறிப்பிடுவதாகவே உள்ளது.

- வினா இல 14-24 வரைக்கும் உள்ள வினாக்கள் பாடநூலுடன் தொடர்பானவை 40%க்கு மேற்பட்டோர் சரியான விடையை குறிப்பிட்டிருந்தனர். பாடப்பரப்பை விளங்கி கிரகித்துக்கொள்ளும் திறனை வளர்ப்பது நன்று.

- ஏனைய வினாக்களான 25-40 வரையுள்ள வினாக்கள் தத்துவம், பொது அறிவு, வரலாற்றம்சங்களைக் கொண்டனவாக அமைந்துள்ளன. இவற்றிற்கு அதிகளவிலானோர் சரியான விடையை அளிக்கத் தவறியுள்ளனர். போதிய நூலறிவும், பயிற்சியும் வழங்கப்படுவது முக்கியமானதாகும்.

- வினாக்களின் தன்மையை நோக்குகின்றபோது 70% மான வினாக்களுக்கு பரீட்சார்த்திகளின் துலங்கல் சிறப்பாக அமைந்துள்ளது. 30% வினாக்களுக்கு பரீட்சார்த்திகளின் துலங்கல் சிறப்பாக காணப்படவில்லை. வினாக்கள் இலகுதன்மையிலிருந்து கடினத்தன்மையை நோக்கிச் செல்லும் முறை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 2.2 வினாப்பத்திரம் II ற்கு விடையளிக்கப்பட்டமை தொடர்பான விபரங்கள்

### 2.2.1 வினாப்பத்திரம் II - கட்டமைப்பு

- நேரம் :- 2 மணித்தியாலங்கள் மொத்தப் புள்ளிகள் 60

- முதலாம், இரண்டாம் வினா கட்டாயமானது. முதலாம் வினா குறுவிடை வினாக்களைக் கொண்டது. ஒரு பகுதிக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20. இரண்டாம் வினா கட்டமைப்பு வினா 16 புள்ளிகள். ஏனைய கட்டமைப்பு வகை வினாக்கள் 5 இல் 3 இற்கு விடையளிக்க வேண்டும். ஒரு வினாவுக்கு 08 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 24 ஆகும்.

## 2.2.2. வினாப்பத்திரம் II - எதிர்பார்க்கப்பட்ட விடைகள், புள்ளி வழங்கும் திட்டம், விடையளித்தல் தொடர்பான அவதானிப்புகளும் முடிவுகளும்

✶ **வரைபு 2 இலிருந்து பெறப்பட்ட தகவல்களிலிருந்து தயாரிக்கப்பட்டது.**

வினாப்பத்திரம் II இல் வினாக்களின் தெரிவு

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | - | 97% | கட்டாய வினாக்கள் |
| வினா 02 | - | 95% | |
| வினா 04 | - | 37% | |
| வினா 05 | - | 89% | |
| வினா 06 | - | 29% | |
| வினா 07 | - | 53% | |

வினா 03 ஐ 90% பரீட்சார்த்திகள் தெரிவு செய்திருந்தனர். இவ்வினா அன்றாட வாழ்வுடன் தொடர்புபட்ட விடயமாக இருந்ததால் பலரும் தெரிவு செய்திருக்கலாம். வினா 05 ஐ 79% பரீட்சார்த்திகள் தெரிவு செய்திருந்தனர். சமய குரவர், சந்தான குரவர் வினாவாக இது அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

வினா 07 ஐ 53% மாணோர் தெரிவு செய்திருந்தனர்.

வினா 04, 06 என்பவற்றை 40% த்திலும் குறைவான ரீட்சார்த்திகளே தெரிவு செய்திருந்தனர். பாடல், சைவ நாற்பாதங்கள் என்பன அடங்கிய பகுதிகளை மாணவர்கள் கருத்தூன்றிக் கற்பதன் மூலம் விடய அறிவை மேம்படுத்த முடியும்.

**வினா இலக்கம் 1**

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை எழுதுக.

(i) கடவுளின் இயல்புகள் பற்றிக் கூறும் திருநூல்கள் **நான்கு** கூறுக.

(ii) மார்கழி மாதத்தில் மகாவிஷ்ணுவை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம் **ஒன்றின்** பெயரையும் சிவனை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம் **ஒன்றின்** பெயரையும் எழுதுக.

(iii) 'தாண்டக வேந்தர்' என்னும் சிறப்புப் பெயருக்குரிய நாயனார் யார்?

(iv) தடுத்தாட்கொண்ட புராணம் யாரால் பாடப்பட்டது? அது எத்தனையாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளது

(v) இலங்கையின் சித்தர் பரம்பரையில் வந்த **இரண்டு** ஞானியர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(vi) உலகமானது இருவகைப் பொருள்கள் கொண்டமைந்தது எனப்படுகிறது. அவை யாவை?

(vii) "யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" - சுருக்கமாக விளக்குக.

(viii) "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" - திருமந்திரம். இப்பாடலடியிலிருந்து நீங்கள் விளங்கிக்கொள்வது யாது?

(ix) பஞ்சபூதங்கள் யாவை?

(x) பாண்டிய நாட்டில் சைவசமயம் மீண்டும் மலர்ச்சி பெறுவதற்குக் காரணர்களாக அமைந்தவர்கள் யாவர்?

## 2.2.3 எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளிவழங்கும் திட்டமும்

### வினா 1

(i) வேதம், ஆகமம்
பன்னிரு திருமுறைகள் (தேவாரம், திருவாசகம்........)
மெய்கண்ட சாத்திரங்கள் (சிவஞானபோதம் முதலியன)

(ii) மகாவிஷ்ணுவை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம் அனுட்டிக்கப்படும் விரதம் :-
திருப்பாவை, வைகுண்ட ஏகாதசி

சிவனை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம் :-
மார்கழித் திருவாதிரை, திருவெம்பாவை (பாவை நோன்பு)

(iii) திருநாவுக்கரசு நாயனார்

(iv) பாடியவர் - சேக்கிழார்
திருமுறை - 12ஆந் திருமுறை

(v) கடையிற் சுவாமிகள்
செல்லப்பா சுவாமிகள்
யோகர் சுவாமிகள்
பெரியானைக்குட்டிச் சித்தர்
சித்தானைக்குட்டிச் சித்தர்
நவநாதச் சித்தர்

(vi) சித்துப்பொருள் (அறிவுடைப் பொருள்)
அசித்துப்பொருள் (அறிவற்ற பொருள்)

(vii) எல்லோருடனும் இனிய சொற்களையே பேச வேண்டும். எவர்க்கும் தீமை பயக்காததும் நன்மை தரக்கூடியதுமான இன்சொற்களையே பேசும்போது பயன்படுத்த வேண்டும்.

(viii) அன்பும் சிவமும் ஒன்றே, வேறு வேறல்ல, அன்பே சிவம்.

(ix) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் அல்லது பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

(x) மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருஞானசம்பந்தர்.

(10 x 2 = 20 புள்ளிகள்)

**அவதானிப்பும் முடிவும்**

வினா 01 சுருக்கமான விடை எழுதும் வினாக்களாகும்.

வினா (i) இற்கு 57 % மான பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்திருந்தனர். இவ்வினாவில் "திருநூல்கள்" என்ற பதத்தை மாணவர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ளச் சிரமப்பட்டுள்ளனர்.

வினா (ii) இற்கு 44% மான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர். ஒரு வினாவில் இரு விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து மாணவர்கள் இரண்டிற்குமே விடை அளித்தல் கட்டாயமானதாகும்.

வினா (iii) இற்கு 48% மான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்தனர். சமய குரவர் வரலாறுகளை நன்கு கற்பதன் மூலம் சரியான விடையை தேர்ந்தெடுக்க முடியும்.

*தொடர்ச்சி மறுபக்கம்...*

வினா (iv) இற்கு 49% மான பரீட்சார்த்திகளே சரியான விடையை அளித்துள்ளனர். இரு விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து மாணவர்கள் வினாவின் இரு பிரிவுகளுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

வினா (v) இற்கு 71% மான பரீட்சார்த்திகள் சரியான விடையளித்துள்ளனர்.

வினா (vi) இற்கு 38 % மானோரே சரியான விடையளித்துள்ளனர். இவ்வினாவை மாணவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளாததால் சரியான விடையளிக்கத் தவறியுள்ளனர்.

வினா (vii) இவ்வினாவிற்கு விடையளித்த பரீட்சார்த்திகளின் வீதம் 42% ஆக உள்ளது. இவ்வினாவில் "சுருக்கமாக விளக்குக" என்ற தொடரை மாணவர்கள் விளங்கிக் கொள்ள சிரமப்பட்டுள்ளனர்.

வினா (viii) இவ்வினாவிற்கு சரியாக விடையளித்தோர் 53% ஆகக் காணப்படுகிறது. இவ்வகை வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு பாடநூல்களை நன்கு கற்றுக் கொள்ளல் அவசியமாகும்.

வினா (ix) 95% மான பரீட்சார்த்திகள் மிகச் சரியான விடையளித்துள்ளமை சிறப்புக்குரியது.

வினா (x) இவ்வினாவிற்கு 41%மான பரீட்சார்த்திகள் மிகச் சரியான விடையளித்திருந்தனர்.

பொதுவாக முதலாம் வினாவைப் பொறுத்தவரையில் வினா இல 1,5,8,9 ஆகிய உப வினாக்களுக்கு 50% இற்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் பூரணமான விடையளித்திருந்தனர். பரீட்சார்த்திகள் பாடநூலை நன்கு கற்று இந்துசமய அறிவை மேம்படுத்திக் கொள்ளல் வேண்டும். இதன் மூலம் நல்ல பெறுபேறுகளை அடைய முடியும்.

**வினா இலக்கம் 2**

**2.** (i) *பின்வரும் பாடல்களுள்* **இரண்டினை** *அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக*
(ii) *அவற்றின் பொழிப்புரையை எழுதுக.*
(அ) "*திருக்கோயி லில்லாத திருவி லூரும் ...*"
(ஆ) "*ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ...*"
(இ) "*அருவமு முருவு மாகி அநாதியாய்ப் ...*"
(ஈ) "*பண்ணும் பரதமும் கல்வியுந் ...*"
(உ) "*ஆத்தாளை யெங்க ளபிராம ...*"

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) திருமுறைப் பாடல்கள்

திருச் சிற்றம்பலம்
திருக்கோயி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவை யெல்லாம் ஊரல்ல அடவி காடே

**பொழிப்புரை :**

ஆலயங்கள் இல்லாத ஊர்கள், நெற்றியிலே விபூதி தரிக்காத மக்கள் வாழ்கின்ற ஊர்கள்,பக்திமையுடன் தோத்திரப் பாடல்களைப் பாடாத ஊர்கள், சிறப்பான ஆலயங்கள் பல இல்லாத ஊர்கள், விருப்பத்துடன் வெண்சங்குகளை ஊதாதவர்கள் வாழுகின்ற ஊர்கள், கோபுரம் கொடி முதலானவை இல்லாத ஊர்கள், விருப்பத்துடன் மலர் பறித்து அர்ச்சித்து, அதன் பின் உணவு உண்ணாதவர்கள் வாழுகின்ற ஊர்கள் உண்மையில் ஊரல்ல. அவை அடர்ந்த காடுகளாகும். (மேற் குறிப்பிட்டவை காணப்படும் ஊர்கள் சிறப்பு மிக்க ஊர்களாக அமையும்.)

தலம் - திருவண்ணாமலை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாண் கிடந்தான் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

**பொழிப்புரை :**

ஒளியுடைய விசாலமான கண்களையுடைய தோழியே! தொடக்கமும் முடிவுமற்ற அருட்பெருஞ்சோதியான சிவபெருமானின் மகிமையை நாம் பாடிக்கொண்டு வருகின்றறோம். ஆனால் நீ அதனைக் கேட்காது இன்னமும் தூங்கிக்கொண்டிருக்கின்றாயோ? உன் காதுகளுக்குக் கேட்கவில்லையோ? மகாதேவனாகிய நம் சிவ பெருமானின் சிலம்பணிந்த திருவடிகளை வாழ்த்திக் கொண்டு வந்த அந்த வாழ்த்தொலி வீதியிலே கேட்ட பொழுது அவள் பக்திப் பரவசமானாள்; விம்மி விம்மி அழுதாள்; மெய்ம்மறந்தாள்; மலர் நிறைந்த மென்மையான படுக்கையிலிருந்து புரண்டு விழுந்து இவ்வாறு ஒன்றும் செய்ய இயலாதவளாய்க் கிடந்தாள். அவளுடைய சிவபக்தி வியக்கத் தக்கது. அவ்வாறிருக்க நம் தோழியாகிய உன்னுடைய இயல்பு இதுதானா? இது என்ன வியப்பு? எம் பாவையாகிய பராசக்தியே!

“அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய”

**பொழிப்புரை :**

(கண்ணுக்குத் தெரியாத) உருவமற்ற அருவமாகவும் (கண்ணுக்குத் தெரியும்) வடிவமாகவும் அநாதியாகவும் பலவாகவும் ஒன்றாகவும் பிரமமாகவும் நின்ற ஒளிப்பிழம்பு ஒரு திருமேனியாக (உடம்பாக) வடிவெடுத்து அது அருள் பொழியும் ஆறு திருமுகங்களையும் பன்னிரு கைகளையும் உடையதாய் உலகம் உய்யும் பொருட்டு ஒப்பற்ற திருமுருகனாக வந்து தோன்றியது.

“பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

**பொழிப்புரை ˙-**

கலைவடிவமாக விளங்கும் சகலகலாவல்லியே வேதங்களிலும் விண் மண் நீர், நெருப்பு, கொடிய காற்று என்னும் ஐம்பூதங்களிலும் அன்பர்களின் கண்களிலும் எண்ணங்களிலும் (எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ளவளே) இசை, நாடகம், நடனம், என்னும் ஐம்பூதங்களிலும், அன்பர்களின் கண்களிலும், எண்களிலும் (எல்லாப் பொருள்களிலும்) நிறைந்துள்ளவளே இசை, நாடகம், நடனம் என்பவற்றுடன் ஏனைய கலைகளும் ஆகியவற்றை விளக்கும் இனிய சொற்களால் அமைந்த நூல்களும், அவற்றை அடியேன் வேண்டுமென நினைக்கின்ற வேளையில் எளிதாக அடையும்படி எமக்கு அருள் செய்வாயாக.

"ஆத்தாளை யெங்க ளபிராம
வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்
குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே."

**பொழிப்புரை :-**

அபிராமவல்லி எங்கள் தாய். அவள் எல்லா உலகங்களையும் படைத்தவள். மாதுளம் பூப்போலும் நிறமுடையவள். உலகம் எல்லாவற்றையும் காப்பவள். அழகிய கரங்களில் தாமரை, மலர், பாசம், அங்குசம், கரும்புவில் என்பவற்றை வைத்திருப்பவள். அவள் மூன்று கண்களை உடையவள். அந்த அம்பிகையைத் தொழுகின்ற அடியவர்களுக்கு ஒரு தீங்கும் உண்டாக மாட்டாது.

(02 x 5 = 10 புள்ளிகள்)
(02x 3 = 06 புள்ளிகள்)
மொத்தம் 16 புள்ளிகள்

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

வினா 02 இற்கு 59% மான பரீட்சார்த்திகளே சரியான விடையளித்திருந்தனர். கட்டாய வினாவாக இருந்தபோதும் ஏனைய பரீட்சார்த்திகள் சரியான விடையளிக்காமைக்கு மனனம் செய்யாமை காரணமாக இருக்கலாம். ஆதலால் மனனப்பகுதிக்குரிய பாடல்கள் யாவும் மனனம் செய்விக்கப்படுவதுடன் பண்ணுடன் பாடவும் பயிற்றுவிக்கப்படுவது அதிக பயனளிப்பதாகும்.

## வினா 3

3. ''சமயம் என்றால் வாழும்முறை அல்லது வாழ்க்கை நெறி எனப்படும்''
   (i) சைவசமய ஒழுகலாறுகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகிவருதலால் கிடைக்கப் பெறும் நன்மைக **இரண்டு** எழுதுக.
   (ii) சைவசமயியிடம் இருக்க வேண்டிய நற்பண்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக.
   (iii) சைவசமயம் காட்டும் சமய, சமூகப் பணிகளின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) சைவநெறி முறைகள் மனிதனை வாழ்வாங்கு வாழச் செய்கின்றன, மனிதர்கள் மனிதத்தன்மையோடு வாழ வழவகுக்கின்றன. மண்ணில் நல்ல வண்ணம் வாழவும் நல்லொழுக்கம் பேணவும் மனிதரை நெறிப்படுத்துகின்றன. ஆன்மீகத்தை வளர்க்கின்றன. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்க்கைப் பயன்களை அடைய உதவுகின்றன. இறைவனை அடையும் உயர்நிலைக்கு இட்டுச் செல்கின்றன.

(2 புள்ளிகள்)

(ii) தியாக மனப்பாங்கு, ஏழைகளுக்கு இரங்குதல், பிறரில் நிறை காணுதல், பிறரை நேசித்தல், அன்பு பேணுதல், பிற உயிர்களின் நலன் காத்தல், நீதி, நேர்மை, பணிவு, பொறுமை, நடுநிலைமை என்பவற்றைக் கடைப்பிடித்தல், மூத்தோர், பெரியோர், பெற்றோர் சொற்கேட்டு ஒழுகுதல்.

(2 புள்ளிகள்)

(iii) "என்கடன் பணிசெய்து கிடப்பதே" - நாவுக்கரசர் இவ்வாறு சமய, சமூகப் பணியின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகின்றார்.
"மக்கள் சேவையே மகேசன் சேவை" - மானிடசேவை இறைபணி எனப்படுகின்றது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் சமய, சமூகத் தொண்டுகள் அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றன. சைவம் சமூக சேவைக்கு உயர்ந்த இடத்தை அளித்துள்ளது. பிறர் நலன் பேணுதல், உயிர்களின் மீது கருணை காட்டுதல், தியாகம், அர்ப்பணம் - இவை உள்ளிட்ட மாணவர்களின் விளக்கத்திற்கு மதிப்பு வழங்கவும்.

(4 புள்ளிகள்)
(மொத்தம் 8 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

சரியான விடையளித்தோர் சதவீதம்

பகுதி i - 80%
பகுதி ii - 89%
பகுதி iii - 54%

இவ் வினா நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபட்டதெனினும் மாணவர்கள் பகுதி iii வினாவைத் தெளிவாக விளங்கிக் கொள்வதில் சிரமப்பட்டுள்ளனர்.

**வினா இலக்கம் 4**

**4.** "*ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த*
*சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்*
*மேலுற வெழுந்துமிகு கீழுற அகழ்ந்து*
*மாலுமிரு வர்க்குமரி யாரொருவர் வந்தார்.*"

*- பெரிய புராணம்*

(i) *சிவபெருமான் சுந்தரரின் திருமணத்தைத் தடுத்து, அவரை ஆட்கொண்டதன் காரணத்தைச் சுருக்கமாக எழுதுக*
(ii) *சேக்கிழார் பெரிய புராணத்திற்கு முதனூலாகவும், துணைநூலாகவும் விளங்குபவை எவை ?*
(iii) *மேலே தரப்பட்டுள்ள பாடலிலிருந்து, சிவபெருமான் யாவருக்கு அறிவதற்கு அரியவராய் உள்ளார்; யாருக்கு எளியவராய் உள்ளார் என்பதைக் குறிப்பிடுக.*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) ஆலாலசுந்தரர் திருக்கயிலையிலே சிவபெருமானுக்கு மலர்பறித்து மாலைதொடுத்துத் தொண்டாற்றி வந்தார். உமாதேவியாருக்குத் தொண்டு செய்து வந்த கமலினி, அநிந்திதை என்போரை அவர் விரும்பியதனால் அவர் சிவபெருமானிடம் தண்டனைக்கு உள்ளானார். சிவபெருமானின் கட்டளைப்படி ஆலாலசுந்தரர் பூலோகத்தில் பிறந்து உலக வாழ்க்கையில் அப் பெண்கள் இருவரையும் மணந்து ஈடுபட வேண்டியதாயிற்று. சிவபெருமான் அவ்வாறு கட்டளையிட்டபோது ஆலாலசுந்தரர் தான் மானிடனாகப் பிறந்து ஆகாமிய வினைகளைத் தேட முயலும்போது தம்மை தடுத்தாட்கொள்ள வேண்டும் எனச் சிவபெருமானுக்கு விண்ணப்பித்தார். சிவபெருமானும் அதற்கு இசைந்தார். சுந்தரர் புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் திருமணம் செய்ய விழைந்தபோது சிவபெருமான் அத்திருமணத்தைத் தடுத்து அவரை ஆட்கொண்டார். பின்னர் பரவையார், சங்கிலியார் என்னும் பெயரில் பூவுலகில் பிறந்த மேற்கூறிய கமலினி, அநிந்திதை இருவரையும் சுந்தரர் மணந்தார். சுந்தரர் உலக வழியில் செல்லாது அருள்வழியில் சென்று மீண்டும் தம்மை வந்து அடைவதற்காகவும், எமக்கெல்லாம் சமயக் குரவராக விளங்குவதற்காகவும் இறைவன் சுந்தரரை தடுத்தாட்கொண்டார்.

(4 புள்ளிகள்)

(ii) முதனூல் : திருத்தொண்டத்தொகை - (சுந்தரர்)
துணைநூல் : திருத்தொண்டர் திருவந்தாதி - (நம்பியாண்டார் நம்பி)

(2 புள்ளிகள்)

(iii) அகந்தை, மமதை, (ஆணவமுனைப்பு உடையவர்க்கு அவர்கள் பிரம்மா, விஷ்ணு போன்ற தேவர்களாயினும், சிவபெருமான் அறிதற்கு அரியர் ஆக உள்ளார். அடியார்களுக்கு (சுந்தரர்) - அகந்தை மமதை அற்றவர். அறிதற்கு எளியராய் உள்ளார்.

(2 புள்ளிகள்)
(மொத்தம் 8 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிபுகளும்**

சரியான விடையளித்தோர் சதவீதம்
பகுதி i - 53%
பகுதி ii - 61%
பகுதி iii - 33%
பெரிய புராணச் செய்யுள் தொடர்பான வினாக்களாக இருந்ததால் பரீட்சார்த்திகள் பலரும் விடையளிக்கத் தவறியமைக்குப் பாட நூலைச் சரிவரக் கற்காமையே ஆகும்.

**வினா இலக்கம் 5**

5. "*அன்பு, பக்தி நெறியை எவ்வாறு நாயன்மார்கள் வளர்த்தார்களோ, அது போன்று அறிவு நெறியை வளர்த்தவர்கள் சந்தான குரவர்கள் ஆவர்.*"
   (i) *சந்தான குரவர்கள்* ***நால்வரின்*** *பெயர்களையும் எழுதுக. சமயகுரவர்கள்* ***நால்வரின்*** *பெயர்களை எழுதுக.*
   (ii) *சைவசித்தாந்தம் குறிப்பிடும் முப்பொருள்கள் எவை ? அவை ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கக் குறிப்புகள் எழுதுக.*
   (iii) *மெய்கண்ட சாத்திர நூல்கள் எத்தனை ? அவற்றுள் மணிமுடியாய் விளங்கும் நூல் யாது ? அந்நூலை இயற்றியவர் யார் ?*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) சந்தான குரவர் :- மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார்

சமய குரவர் :- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசகர்.

(2 புள்ளிகள்)

(ii) முப்பொருள்கள் :- பதி, பசு, பாசம், (என்றும் உள்ள பொருட்கள்)

பதி : கடவுள் ; அறிவிக்காமலே அறியும் பொருள். மெய்ப்பொருள் :-
பரம்பொருள் ; ஆதியும் அந்தமும் அற்ற பொருள். அநாதியானது, அவருக்கு மேலாக ஒரு தலைவனும் இல்லை. வடிவம், குணம், குறி இல்லாதவர். எனினும் ஆன்மாக்கள் தம்மை வழிபட்டு உய்யும் பொருட்டு உருவம், அருவம், அருவுருவம் என்னும் திருமேனிகளை உடையவர். ஐந்தொழில்களைச் செய்பவர் ...............

பசு : உயிர் அல்லது ஆன்மா, உயிர்கள் பல. அறிவித்தால் அறியும். அறிவிக்காவிடில் அறிந்துகொள்ள மாட்டாத பொருள். பதியினைப் போலவே ஆன்மாக்களும் அநாதியானவை; அழிவற்றவை; பாசங்களோடு தொடர்புபட்டிருக்கும் தன்மையால் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூவகைப்படும். ஆன்மா பகுதியைச் சாரும்போது சத்தாயும், பாசங்களைச் சாரும்போது அசத்தாயும் இருப்பதால் "சதசத்து" எனப்படுகின்றது. ஆன்மா சிற்றறிவுடையது, சுதந்திரமற்றது.

பாசம் : மும்மலங்கள் ஆணவம், மாயை என மூவகைப்படும். ஆணவம் ஆன்மாவின் அறிவை மறைத்து நிற்கும். ஆணவமலம் அநாதியாய் ஆன்மாவோடுள்ளது. ஆன்மாவின் அறியாமைக்கு காரணம் ஆணவம். நான் என்னும் அகந்தையையும், எனது என்னும் மமதையும் ஆன்மாவுக்கு கொடுக்கின்றது. கன்மவினை - நல்வினை, தீவினை என இரண்டாகும். நல்வினையாவது புண்ணியச் செயல்கள். தீவினையாவது பாவச் செயல்கள். நல்வினை செய்தால் இன்பமும் தீவினையின் பயனாகத் துன்பமும் அனுபவிக்கின்றனர். வினைப் பயன்களை அனுபவிக்கும் பொருட்டே மானுடப் பிறவி எடுக்கப்படும். பாசங்களில் ஒன்றாகிய மாயையில் இருந்தே தனு, கரண, புவன போகங்கள் உண்டாக்கப்படுகின்றன. (3 புள்ளிகள்)

(iii) மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு (14)

- மணிமுடியாய் விளங்கும் நூல்: சிவஞானபோதம்
- இயற்றியவர் : மெய்கண்டதேவர் (3 புள்ளிகள்)

மொத்தம் : 8 புள்ளிகள்

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

சரியான விடையளித்தோர் சதவீதம்

| | | |
|---|---|---|
| பகுதி i | - | 80% |
| பகுதி ii | - | 60% |
| பகுதி iii | - | 43% |

இவ்வினாவின் பகுதி ii, iii இற்கான வினாக்கள் சைவசித்தாந்தத்துடன் தொடர்புபட்டிருந்தமையால் பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடை எழுதத் தவறியிருந்தனர். ஆதலால் பாடநூலை விளக்கமாக கற்பிக்க வேண்டியது அவசியமாகும்.

**வினா 06**

**6.** *"விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்*
*அரும்பு மலர் காய்கனி போலன்றோ பராபரமே"*

*- தாயுமானவர்*

(i) *சைவநாற்பாதங்கள் யாவை ? அரும்பு, மலர், காய், கனி என்பன முறையே நாற்பாதங்களில் எவ்வெவற்றைக் குறித்து நிற்கின்றன.*

(ii) *சரியை நெறி என்பது யாது ? இந்நெறியின் மறுபெயர் என்ன ? சரியை நெறியில் நின்று முத்தியடைந்த நாயன்மார்கள்* ***இருவரின்*** *பெயர்களைத் தருக. சரியைத் தொண்டுகள்* ***இரண்டு*** *கூறுக.*

(iii) *அட்டாங்க யோக உறுப்புக்கள் எவை ?*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) சைவ நாற்பாதங்கள் : சரியை, கிரியை, யோகம், ஞானம்.

அரும்பு - சரியை மலர் - கிரியை

காய் - யோகம் கனி - ஞானம்

(2 புள்ளிகள்)

(ii) சரியைநெறி :- அன்பு மேலீட்டினால் உடம்பினால் செய்யப்படுகின்ற இறைபணிகள் யாவும் சரியை நெறியாகும்.

- இந்நெறியின் மறுபெயர் தாசமார்க்கம்.
- நாயன்மார்கள் : திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், கண்ணப்பநாயனார், திருநாளைப்போவார் (நந்தனார்), திருக்குறிப்புத் தொன்டர், அதிபத்த நாயனார்.
- சரியைத் தொண்டுகள் : சிவாலயத்தை அலகிடுதல், மெழுகுதல், கழுவுதல், துப்புரவு செய்தல், பூந்தோட்டம் அமைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், மாலை கட்டுதல், பூசைப் பொருட்கள் கொடுத்தல், விளக்கேற்றுதல், மற்றும் ஆலயத் தொண்டுகள் செய்தல்.

(4 புள்ளிகள்)

(iii) இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

(2 புள்ளிகள்)

(மொத்தம் 2+ 3+5 = 10 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

சரியான விடையளித்தோர் சதவீதம்

பகுதி i - 76%

பகுதி ii - 45%

பகுதி iii - 15%

இவ்வினாவின் பகுதி iii இற்கான வினா பரீட்சார்த்திகளால் இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாமல் இருந்திருக்கலாம். ("அட்டாங்க யோக உறுப்புக்கள்" என்ற சொற்பதத்தை பாடநூலில் உள்ளவாறு கற்றுத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.)

**வினா 07**

**7.** *பின்வருவனவற்றுள் எவையேனும்* ***இரண்டிற்குச்*** *சிறுகுறிப்புரைகள் எழுதுக.*

**(i)** *நல்லொழுக்கத்தின் சிறப்பு*

**(ii)** *ஆப்பூதியடிகள்*

**(iii)** *இந்துபோர்ட் சு. இராசரத்தினம்*

**(iv)** *மாமாங்கத் தீர்த்த மகிமை*

**(v)** *சமய தீட்சை*

**எதிர்பார்க்கப்பட்ட விடைகளும் புள்ளி வழங்கும் திட்டமும்**

(i) நல்லொழுக்கத்தின் சிறப்புகள்

- சைவத்தின் பிரதான ஒழுக்கங்கள், பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகள்
- ஆடைகளை கணுக்காலுக்குக் கீழ் தொங்க விடாது அணிதல்.

(ii) அப்பூதியடிகள்

- சிவனடியார்களில் ஒருவர்
- அப்பூதியடிகள், நாவுக்கரசர் தொடர்பு
- சிவனடியார்களைப் போற்றும் பணி

(iii) இந்துபோட் சு. இராசரத்தினம்

- தோன்றிய சூழல்
- சைவக் கல்விக்கு அவருடைய பணி
  சைவ வித்தியா விருத்திச் சங்கத் தொடர்பு

(iv) மாமாங்கத் தீர்த்த மகிமை :-

- மாமாங்கத் திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புப் பெற்றது.
- மாமாங்க தீர்த்தத்தின் கர்ணபரம்பரைக் கதை
- பிதுர்வழிபாட்டுடன், பிதுர்க் கடன் செய்வதிலும் கிழக்கு மாகாணத்தில் சிறப்புப் பெற்றது.

(v) சமய தீட்சை :-

- தீட்சை என்பதன் பொருள்
- தீட்சை வகைகள்
- தீட்சை பெற்றவர்களது ஆசாரமும் தகுதியும்

(02 x 4 = 08 புள்ளிகள்)

**விடையளித்தல் தொடர்பான அவதானிப்பும் முடிவுகளும்**

சரியான விடையளித்தோர் சதவீதம்

| | | |
|---|---|---|
| பகுதி i | - | 64% |
| பகுதி ii | - | 66% |
| பகுதி iii | - | 49% |
| பகுதி iv | - | 52% |
| பகுதி v | - | 39% |

பகுதி i இற்கான வினா வாழ்க்கை விழுமியக் கருத்துச் சார்ந்தது பகுதி ii, iii இற்கான வினாக்கள் மெய்யடியாரையும் சமயப் பெரியாரையும் சார்ந்தவை. பகுதி iv சமயவரலாற்றுடன் தொடர்பானது பகுதி v வினா சமய விழுமியம் சார்ந்தது. பகுதி v (ஐந்தைத்) தவிர்ந்த ஏனைய வினாக்களுக்கு பரீட்சார்த்திகள் சாதாரண மட்டத்திலேயே விடையளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பகுதி III

# 3.0 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்களும் ஆலோசனைகளும்

## 3.1 விடையளிக்கும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்

**பொதுவானவை**

* மாணவர்கள் வினாப்பத்திரங்களிலுள்ள அறிவுறுத்தல்களை முழுமையாக, சரியாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். எத்தனை வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்?, கட்டாய வினாக்கள் எவை?, நேர ஒதுக்கீடு எவ்வளவு?, புள்ளி ஒதுக்கீடு எவ்வளவு? என்பவற்றை முதலில் சரியாக விளங்கிக் கொண்டு, பின்னர் வினாக்களை சரியாக வாசித்து விளங்கி விடையளித்தல் வேண்டும்.

* முதலாம் பகுதிக்கு விடையளிக்கும்போது மிகச் சரியான ஒரு விடையைத் தெரிவுசெய்து எதிரேயுள்ள கூட்டுக்குள் தெளிவாக புள்ளடியிடல் வேண்டும்.

* இரண்டாம் வினாப்பத்திரத்திற்கு விடையளிக்கும்போது ஒவ்வொரு பிரதான வினாக்களையும் விடைத்தாளின் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் நன்று.

* எழுத்துக்களைப் பிழையின்றி தெளிவான கையெழுத்தில் எழுத வேண்டும்.

* ஒவ்வொரு விடைத்தாள்களின் இரு பக்கத்திலும் சுட்டெண்களைத் தெளிவாக எழுதுதல் அவசியம்.

* வினா இலக்கத்தையும் பிரிவு வினாக்களின் இலக்கங்களையும் விடை எழுத ஆரம்பிக்குமுன் தெளிவாக சரியாக குறிப்பிட வேண்டும்.

* வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதற்கேற்ப சுருக்கமாயும், விளக்கமாயும் விடையளித்தல் நன்று.

* வினாக்களுக்கேற்ப விடையளிக்கும்போது, தர்க்கரீதியாகவும் ஆய்வுரீதியாகவும் விடையளித்தல் வேண்டும்.

**பாடரீதியானவை**

* மாணவர்கள் நவீன அறிவுக் கருவூலங்களைப் பெற்று அவற்றைப் பொருத்தமான இடங்களில் பிரயோகிக்க வேண்டும்.

* பாடங்களைக் கற்பதன் மூலம் பெறும் அறிவை வினாக்களுக்கு ஏற்ப விடை உருவில் மாற்றி வழங்கும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

* வினாக்களில் வினவப்படுகின்ற நன்மை, தீமை கூறுதல், சாதகம், பாதகம் கூறுதல் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு விடையளித்தல் அவசியமாகும்.

* கற்றல் இடமாற்றம் இங்கு வேண்டப்படுகிறது. அதாவது தாம் கற்ற விடயங்களைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொள்ளும் திறன் அவசியமாகும்.

## 3..2 **கற்றல் கற்பித்தல் தொடர்பான கருத்துக்களும் ஆலோசனைகளும்**

- ✶ தேவாரங்களை ஞாபகத்தில் வைத்திருக்கச் செய்வதற்கான பயிற்சிகளை அதிகம் செய்வித்தல்.
- ✶ பாட விடயத்தைக் கற்பித்த பின் உடனுக்குடன் வினா விடைப் பயிற்சிகள் வழங்கி மதிப்பீடு செய்வது அதிக பலனைத் தரும்.
- ✶ ஆசிரியர்களும் அதேபோல் மாணவர்களும் கல்விசார் தகவல்களைச் சேகரிக்கவும், அதன்படி சுயமாகக் கற்றலில் ஈடுபடவும் தூண்டுதல் வேண்டும்.
- ✶ மொழிச் செம்மை பற்றிய கரிசனை அதிகம் வேண்டப்படுகிறது. எழுத்துப் பிழைகள், இலக்கண வழுக்களை தவிர்ப்பதற்கான பயிற்சிகளும் ஆழமான, அழகிய சொந்த மொழிநடையில் விடைகளை முன்வைக்கும் திறனையும் விருத்தி செய்வதற்கு அவ்வப் பாடமுடிவில் மேலதிகப் பயிற்சிகளை ஆர்வத்துடன் செய்யத் தூண்டுதல்.